# 1. செய்சட்டப் பொருள் விளக்கம் அல்லது பொருள்விளக்கமுறை அல்லது செய் சட்டம் (மொத்தமாக படிக்கப்பட வேண்டும் என்பதன் அர்த்தம்)

**[MEANING OF INTERPRETATION OR CONSTRUCTION]**

**[A STATUTE MUST BE READ AS A WHOLE]**

(முக்கியம்)

உரைச்சுருக்கம்: **[SYNOPSIS]**

அ. முன்னுரை

ஆ. பொருள் விளக்கத்தின் பொருள் மற்றும் வரையரை

இ. சட்டப் பொருள் விளக்கத்தின் முக்கியத்துவம்

ஈ. சட்டப் பொருள் விளக்கம் காணுதல் மற்றும் பொருள் கொள்ளுதலுக்குள்ள வேறுபாடுகள்

உ. பொருள் விளக்க விதிகள்

- **I.** சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணம்
- **II.** செய்சட்டம் திறனுடனும் நடைமுறைக்கு உகந்ததாகவும் செய்யப்படவேண்டும்.
- **III.** செய்சட்டம் முழுமையாக படிக்கப்படவேண்டும்
- **IV.** செய் சட்டங்களின் பொருள் தெளிவாக இருந்தால் அது அப்படியே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்
- **V.** தெளிவான அர்த்தக் கொள்கையை மதிப்பிடுதல்
- **VI.** ஒழுக்கப்பண்பு மற்றும் பொருள் விளக்கம்

ஊ. முடிவுரை

## அ. முன்னுரை:
**[INTRODUCTION]:**

தற்காலத்தில் மிகச்சிறந்த சட்ட நிபுணர்களால் செய்சட்டங்கள் எழுதப்படுவதாலும், நிபுணர்கள் எழுதுவதால் எந்தக் குறையுமிருக்காது என எதிர்பார்க்கப்படுவதாலும் செய்சட்டங்களுக்கான பொருள் விளக்கம் தேவையில்லை எனக் கருதலாம்.

ஆனால், நடைமுறையில் நீதிமன்றங்கள் அத்தகு செய்சட்டங்களில் உள்ள சந்தேகத்துக்குரிய வார்த்தைகளுக்கு சரியான பொருளைக் கண்டுபிடிப்பதிலேயே அவற்றின் பொன்னான நேரம் வீணடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

எனவே மிகச்சரியாக செய்சட்டம் செய்ய சாத்தியம் இல்லை என்றாகிறது. பொருள் விளக்கத்திற்கான விதிகளை உருவாக்குவதே மாற்று வழியாகும்/பண்டைய அனுபவம் மற்றும் சட்டப் பொருள் விளக்கத்திற்கான வழிமுறை, சட்ட பொருள் விளக்கத்திற்கான சில விதிகளை உருவாக்குவதற்கு வழிவகுத்துள்ளது.

இதன் மூலம் சட்டப்பொருள் விளக்கத்திற்காக தங்களது பொன்னான நேரம் வீணடிக்கப்படுவதை நீதித்துறையும் வழக்கறிஞர்களும் தவிர்க்க முடியும்.

## ஆ. பொருள் விளக்கத்தின் பொருள் மற்றும் வரையரை:
**[DEFINITION AND MEANING OF 'INTERPRETATION OF STATUTES']:**

1. **சால்மோன்ட் (Salmond)** இயற்றப்பட்ட சட்டங்களின் அர்த்தத்தை உறுதியாக அறிந்துகொள்வதற்கு நீதிமன்றங்கள் பயன்படுத்தும் விதிமுறைதான் பொருள் விளக்கமாகும். அத்தகைய பொருள் விளக்கம் அதிகாரபூர்வமான வடிவினைக் கொண்ட ஊடகத்தின் வழியே சொல்லப்படுகிறது.



2. **கிராஸ் (Cross)** பொருள் விளக்கம் என்பது, நீதிமன்றம், சட்டபூர்வ சரத்துகளின் அர்த்தங்களை உறுதிப்படுத்துவதற்கான தொடர் செயல். பொருள் விளக்கத்தை அவர்கள் முன்னே உள்ள பல்வேறு சூழ்நிலைகளுக்குப் பயன்படுத்துவதே இதன் நோக்கம்.

3. **பேராசிரியர் கிரே (Prof. Gray)** பொருள் விளக்கம் என்பது ஒரு நீதிபதி சட்டப்புத்தகத்தில் உள்ள வார்த்தைகளைக் கொண்டு கட்டுமானம் செய்வதற்கான தொடர் செயலே ஆகும். அவர் எந்த அர்த்தம், சட்டசபையின் எண்ணமாக இருக்கும் என நம்புகிறாரோ அல்லது எந்த அர்த்தம் அதைப் பிரதிபலிப்பதாக உள்ளதோ, அந்த பொருளை அவர் உருவாக்குகிறார்.

4. **நீதியரசர் இதயதுல்லா (Justice Hidayatullah)** சட்டப்பொருள் விளக்கம் என்பது செய்சட்டங்களின் கட்டுமானத்திற்கான விதியாகும். சட்டப் பொருள் விளக்கத்தில் நீதித்துறை அதன் அர்த்தம் அல்லது தர்க்கரீதியான அர்த்தத்தைக் கண்டறிந்து அதன்படி செயல்பட வேண்டும். சாதாரணமாக நீதிமன்றங்கள் பொதுவான வழக்கமான அர்த்தங்களைத் தாண்டி செயல்படுவதில்லை என நீதிபதி இதயத்துல்லா பதவிளக்கம் தருகிறார்.

5. **சீப்போர்டு கோர்ட் எஸ்டேட்ஸ் லிமிடெட் எதிர் ஆஷர் லார்டு டென்னிங் (In *Seaford Court Estates Ltd. Vs. Asher Lord Denning)*** என்பவர், ஒரு நீதிபதி, எந்தப் பொருளால் ஒரு சட்டம் செய்யப்பட்டுள்ளதோ அந்தப் பொருளை கண்டிப்பாக மாற்றக்கூடாது. ஆனால் அவர் அதிலுள்ள களைகளைக் கழைய முடியும் மற்றும் கழைய வேண்டும்.

6. **தேஜ்குமார் பாலகிருஷ்ணா ரூலா எதிர் A.K.மோகன் [In *Tejkumar Balkrishna Rule Vs A.K. Mohan*]** வழக்கு பின்வரும் வகையில் சட்டப் பொருள் விளக்கத்தை விளக்குகிறது. நீதிமன்றம் அதற்கு தேவைப்படும் வகையில் சட்டத்தை பொருள் விளக்கம் செய்ய வேண்டும். இரண்டு பொருள் விளக்கம்

உள்ளபோது ஒரு பொருள் விளக்கத்தை அனுமதிக்கலாம். அந்தப் பொருள் விளக்கமானது சட்டரீதியில் அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

7. நதிபாய் எதிர் மகேஸ்வரி சமாஜ் ரமோலா டிரஸ்ட் ***(In Nathibai Vs. Maheswari Samaj Ramola Trust)*** எனும் வழக்கில் நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது. ஒரு நீதிமன்றம் தானாக தெள்ளத்தெளிவான அர்த்தம் கொண்ட ஷரத்தைக் கூட்டவோ குறைக்கவோ முடியாது. அதே சமயம் அதிலுள்ள குறிக்கோள் மற்றும் அர்த்தம் கெடாதவாறு பொருள் விளக்கம் செய்யப்படல் வேண்டும்.

## இ. சட்டபொருள் விளக்கத்தின் முக்கியத்துவம்: [IMPORTANCE OF INTERPRETATION (VALUE OF STUDY OF INTERPRETATION OF STATUTES]:

தற்காலத்தில் சட்டங்கள் மற்றும் விதிகள் சட்ட நிபுணர்களால் எழுதப்படுகிறது. அவ்வாறு செய்யும் போது அதன் அர்த்தம் தெளிவற்றுப் போகாதவாறும் மற்றும் பொருள் விளக்கத்திற்கு இடம் கொடுக்காத வகையில் சரியான வார்த்தையை உபயோகிக்க அவர்கள் பெரும் சிரத்தை எடுத்துக் கொள்கிறார்கள்.

இருப்பினும் சட்டத்தை செயல்படுத்தும் போது பெரும்பாலும் உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தைகளின் அர்த்தத்தை அறிய சிரமங்கள் எழுகிறது.

ஏனெனில் வேறுபட்ட தறுவாய்கள் மற்றும் சூழ்நிலைகளில் வார்த்தைகள் வேறுபட்ட அர்த்தங்களைக் கொண்டிக்கிறது. சட்டசபையின் எண்ணம் பொதுவாக இயற்றப்பட்ட சட்டத்தின் வடிவில் வெளிப்படுத்தப்படுகிறது.

இயற்றப்பட்ட சட்டத்தில் உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தையிலிருந்து சட்ட சபையின் உண்மையான எண்ணத்தைக் கண்டறிய வேண்டியது நீதிமன்றமாகும். இவ்வாறு பொருள் விளக்கம் / கட்டுமானத்திற்கான தேவை அவசியமாகிறது.



இருப்பினும் நீதிமன்றம் தன்னிச்சைப் போக்காக பொருள் விளக்க முடியாது. எனவே சட்டமன்றத்தில் உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தையிலிருந்து உண்மையான அர்த்தத்தைக் கண்டறிய கொள்கைகளை உருவாக்குவது அவசியமாகிறது. இவ்வாறு தனியாக கற்கப்பட வேண்டிய அளவிற்கு சட்டப் பொருள் விளக்கம் அதிகபட்ச அளவில் வளர்ந்துள்ளது.

கூலியின் கூற்றுப்படி, பொருள் விளக்கம் என்பது வார்த்தைகளிலிருந்து அதன் உண்மைப் பொருளை கண்டுபிடிக்கும் ஒரு கலை. அதாவது அவர் கூற எண்ணிய அதே கருத்தை மற்றவர்கள் புரிந்துகொள்ள உதவுவதாகும்.

## ஈ. பொருள் விளக்கம் காணுதல் மற்றும் பொருள்கொள்ளுதலுக்கு உள்ள வேறுபாடுகள்: [DIFFERENCES BETWEEN INTERPRETATION AND CONSTRUCTION]:

1. நீதிபதிகளில் சிலர், பொருள் விளக்கம் என்பது எந்த வடிவில் அமைந்த வார்த்தைகளிலும் அதன் உண்மைப் பொருளைக் கண்டுபிடிக்கும் கலை எனக் கூறுகின்றனர். அதாவது என்ன கூற நினைக்கிறாரோ அதே கருத்தை மற்றவர்களும் புரிந்துகொள்ள உதவும் கலை.

   அதுவே பொருள்கொள்ளுதல் என்பது சட்டத்தின் எழுத்துக்களிலிருந்து இல்லாமல் அதன் உணர்வுகளிலிருந்து முடிவுகளைக் கண்டறிவதாகும். வாசகத்தின் நேரடி வெளிப்பாட்டிற்கு வெளியே இருக்கும் உணர்வுகளிலிருந்து அறியப்பட்ட மற்றும் அளிக்கப்பட்ட கூறுகளிலிருந்து கண்டறியப்படுகிறது.

2. சட்டப் பொருள் விளக்கம் மற்றும் பொருள் கொள்ளுதலுக்குமிடையே உள்ள வேறுபாடானது வெறும் செயல்முறை சாரா முக்கியத்துவம் பெறுகிறது. ஆனால் பொது வழக்காற்றில் இரண்டிற்கும் ஒரே முக்கியத்துவம் பெறுவதாக அறியப்படுகிறது என்பது மற்றொரு சாராரின் கூற்றாகும்.

## உ. சட்டப்பதங்களை பொருள் விளக்கம் செய்வதற்கான விதிகள்: [சட்டப்பதங்களைஉபயோகிப்பது]:

**[RULES OF INTERPRETATION OF LEGAL TERMS (USE OF LEGAL TERMS)]:**

## I. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணம்: [Intention of the legislature]:

1. சட்டமன்றத்தின் உண்மையான எண்ணத்தின் மீது செயல்பட வேண்டியது நீதித்துறையின் கடமையாகும்.

2. எந்த மொழியிலும் அதிலுள்ள வார்த்தைகள் சரியான துல்லியமான பொருளை உணர்த்தும் அறிவியல் பூர்வமான குறியீடுகள் அல்ல. எனவே வார்த்தை ஒருவரின் எண்ணத்தை முழுவதுமாக மற்றும் மிகச்சரியாக வெளிப்படுத்த முடியாது.

ஒரு கற்பனைத்திறன் மிக்க சட்டசபை கூட தான் இயற்றிய செய்சட்டத்தினால் பின்னாளில் ஏற்படும் சிக்கலான சூழ்நிலையினை முன்கூட்டியே உணர முடியாது. எனவே அச்சட்டசபையின் உண்மையான எண்ணத்தைத் தேடிக் கண்டுபிடிப்பது தேவையாகிறது.

3. பொருள் விளக்கம் செய்வதில் உள்ள சிக்கலே வார்த்தைகளின் சரியான அர்த்தத்தைக் கண்டுபிடிக்கும் பிரச்சனைதான். வார்த்தைகள் படிப்போரின் மனதிலுள்ள குறிப்புகளைத் தூண்டும் குறியீடுகளே ஆகும்.

எந்த மொழி வார்த்தையானாலும், பலதரப்பட்ட படிப்பாளிகளை, பல்வேறு தறுவாய் மற்றும் நேரங்களில் குறிப்பெடுக்க வைக்கும் திறன் கொண்டவை. மேலும், ஒரு குறிப்பிட்ட சொல்லின் பொருள், வரம்பிற்குட்பட்ட அல்லது சற்றே வெளியில் உள்ள விளிம்புநிலை வழக்குகளில் சிக்கலே நீடிக்கும்.

சட்ட சபைகள் அவற்றால் இயற்றப்பட்ட செய்சட்டங்களில் அத்தகைய சிக்கல் வரும்பொழுது அதன் எண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் அதற்கான திருத்தத்தையோ அல்லது அந்த ஷரத்தினை நீக்கியோ புதிய சட்டம் வெளியிடலாம் .



சட்டம் இயற்றுவதற்கான வழக்கமான செய்முறைகளை செய்த பிறகு புதிய செய்சட்டம் மூலம் மட்டுமே இதை செயல்படுத்த முடியும்.

4. சில வார்த்தைகளில் அர்த்தத்தின் கடினமான மத்திய கூறு மற்றும் பகுதியளவு வெளிச்சம்— தெளிவற்ற எல்லை உள்ளது. இந்த எல்லை நிலைக்குள் அல்லது அருகே விழும் வழக்குகளில் தெளிவான அபிப்பிராய பேதத்திற்கு வழிவகுக்கிறது.

எனவே அத்தகைய எல்லை நிலை வார்த்தைகளின் அர்த்தத்திலிருந்து கடினம் எழுகிறது. எனவே பொருள் விளக்கம் செய்தவரின் எண்ணத்தைக் கண்டறிவது அவசியமாகிறது.

5. உறுதியற்ற பரிந்துரைகள் இல்லாத வார்த்தைகள் தெளிவு மற்றும் சரியான தன்மையில் குறைபாடு கொண்டிருக்கும். எனவே கட்டுமானத்தில் மாறுபட்ட வினாக்களுக்கு வழிவகுக்கிறது. இயற்றிய சட்டத்தை நீதிமன்றங்கள் செதுக்கி அல்லது உருவாக்கும் வகையில் பொருள் விளக்கம் செய்யும்.

எனவே அவர்கள் இயற்றிய சட்டத்தினை முடிப்பவர்கள் புதுப்பிப்பவர்கள் மற்றும் மெருகூட்டுபவர்கள் என அழைக்கப்படுகிறார்கள். மேலும் செய்முறைக்கான மாறுபட்ட கோணங்கள் தேவைப்படும் நிலையில் அவர்களுக்கு வந்து சேரும்.

சட்டம் இயற்றுபவர்களின் எண்ணத்தின்படி நீதிபதிகள் இயற்றப்பட்ட சட்டத்தில் கொண்டிராத சில வார்த்தைகளைக் கூட்டுவார்கள் அல்லது காலி இடங்களை நிரப்புவார்கள்.

கட்டுமானத்தின் ஒவ்வொரு செய்முறையும் செய் சட்டத்தில் வெளிப்படையாக அல்லது உட்கிடையாக உள்ள எண்ணத்திற்கான தேடுதலாகும்.

6. எனவே சட்டமன்றத்தின் எண்ணங்கள் என்பதில் இரண்டு கூறுகள் உள்ளது. முதலாவது அது வெளிப்படுத்தும் அர்த்தத்தின் பற்றீடு ஆகும்.

இரண்டாவது நோக்கம் மற்றும் குறிக்கோளுக்கான கொள்கை அல்லது இயற்றப்பட்ட சட்டத்தினை பரப்புவதற்கான காரணம் மற்றும் உணர்வாகும். ஆகவே கட்டுமானத்திற்கான, செயல்முறை சாரா அணுகுமுறைகளை இணைக்கிறது.

7. கட்டுமானத்தின் முதல் மற்றும் முதன்மை விதியானது சட்டசபையின் எண்ணம், சட்டமன்றத்தில் உபயோகப்படுத்தப்படும் வார்த்தைகளில் கண்டறியப்பட வேண்டும் என ஜே.சுஜேந்திர காட்கர் கூறுகிறார்.

8. சட்டமன்றத்தில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் அனைத்தும் எப்பொழுதும் சரியான அர்த்தத்தைக் கொண்டிருப்பதில்லை. எனவே சந்தேகம் இருக்கும் போது எப்பொழுதும் இயற்றப்பட்ட சட்டத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம் அல்லது அதற்குப் பின்னால் உள்ள காரணம் மற்றும் உணர்வின் மீது கண் வைத்திருப்பது நலம்.

ஒவ்வொரு வார்த்தையும், கட்டுரை அல்லது வரி அச்சட்டத்தின் பொதுவான நோக்கத்தின் பேரிலேயே பொருள் கொள்ளப்பட வேண்டும் என ஜெ.முகர்ஜி கூறுகிறார்.

9. இயற்கையான வார்த்தைகள், தறுவாய், ஆய்வுப்பொருள், விளைபயன்கள் மற்றும் வினைபயன் அல்லது சட்டத்தின் உணர்வு மற்றும் விவாதப் பொருள் என்ற நேரிய குறியீடுகள் மூலம் சட்டமன்றத்தின் எண்ணத்தை ஆராய்வதே செய்சட்டப் பொருள் விளக்கத்திற்கான மிக நியாயமான மற்றும் பகுத்தறிவுள்ள வழிமுறையாகும்.

10. சட்டத்தின் சரியான கட்டுமானம், அதன் மொத்த குறியெல்லை மற்றும் நோக்கம் அதன் வார்த்தைகளின் ஆய்வு மற்றும் அது இயற்றப்பட்ட சூழ்நிலையோடு பற்றீடு கொள்ளப்படும் போது தான் பெறப்பட முடியும் என போர்ட்டர் பிரபு கூறுகிறார்.



11. செய் சட்டம் என்பது சட்டமன்றத்தின் படைப்பு. மரபுரீதியாக நோக்கும் பொழுது பொருள் விளக்கம் என்பது சட்டமியற்றுபவர்களின் எண்ணத்தைக் கண்டுபிடிப்பதாகும்.

நீதிமன்றங்கள், ஒரு சட்டமுறை வகையத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் விளக்கம் இருக்கும் பட்சத்தில், சட்டமன்றத்தின் உண்மையான எண்ணத்தைக் கண்டுபிடித்து அதன்படி செயல்படுதலே அதன் முக்கிய கடமையாகும்.

12. குறிப்பிட்ட எண்ணத்தினை கூறுவதற்கு வெளிப்பாடாக வார்த்தைகளின் சரியான அர்த்தத்தைக் கண்டறிவதுதான் பொருள் விளக்கத்தின் முக்கிய பிரச்சனையாகும். எந்த் மொழியில் உள்ள வார்த்தைகளானாலும் பல்வேறு தறுவாய் மற்றும் நேரங்களில் பல்வேறு பொருளை உணர்த்தும் தன்மை கொண்டவையே.

குறிப்பாக விளிம்புநிலை வழக்குகளில் வார்த்தை தவறாகப் புரிந்து கொள்ளப்பட முடியும். சட்டத்தை இயற்றிய பிறகு, அச்சட்டமன்றமே அதற்கு பொருள் விளக்கமளிக்க முடியாது. தனிப்பட்ட சட்டமியற்றும் கூறுகளினால் அது திருத்த அல்லது இரத்து செய்ய மட்டும் முடியும்.

13. சில வழக்குகளில் சில வார்த்தைகளைச் சேர்ப்பதன் மூலம் மற்றும் பல சமயங்களில் இடத்தை நிரப்புவதன் மூலம், நீதிபதிகள் பொருள் விளக்கத்தில் உருவாக்குதல் பணிபுரிவார்கள்.

இது மரபுவழி அணுகுமுறைப்படி நிச்சயம் சரியல்ல. வெளிப்படையான அல்லது உட்கிடையான எண்ணத்தைத் தேடுவது தான் கேட்கப்படுகிறது. இயற்றப்பட்ட சட்டத்தில் உள்ள

வார்த்தைகளின் அர்த்தம் மற்றும் நோக்கம், குறிக்கோள் அல்லது காரணம் மற்றும் உணர்வின் மூலமாக சட்டமன்றத்தின் எண்ணம் அறியப்பட முடியும்.

இருப்பினும் வாசகத்தின் வார்த்தைகளுக்குள் கண்டறியாத ஒன்றைத் தோற்றுவிப்பது நீதிபதிகளின் கடமையல்ல. ஒவ்வொரு வார்த்தையும், பதமும், வாக்கியமும் சட்டத்தின் பொது நோக்கத்திற்குள்ளேயே பற்றீடு கொள்ளப்பட வேண்டும்.

14. இயந்திரம் போன்று சாதாரணமாக எந்த நோக்கமுமில்லாது பொருள் விளக்கமளிப்பது, அச்சட்டத்தின் முழுப்பலனையும் சரியான தீர்வுகளையும் கொடுக்க முடியாது பயனற்றதாகிவிடும்.

சட்டத்தின் குறிக்கோளை நிறைவேற்ற சட்டத்தின் உணர்வைத் தேடுவதற்கான சுதந்திரம் நீதிபதிகளுக்கு அனுமதிக்கப்படுகிறது. பொருள் விளக்கத்திற்கான விதிகள் சட்டத்தின் விதிகள் அல்ல.

ஆனால் அவை வழிகாட்டிகளாக மட்டும் செயல்படுகிறது. விதிகளினால் எந்த உபயோகமான நோக்கமும் செயல்படவில்லையென்றால் அவை நிராகரிக்கப்பட முடியும். அவற்றின் இடத்தில் புதிய விதிகள் அமைக்கப்படும்.

**கல்குவாரி உரிமையாளர்கள் சங்கம் எதிர் பீகார் மாநிலம்:**
***[The Quarry Owners Association Vs. State of Bihar AIR 2000 SC 2870]:***

செய்சட்டத்தில் உள்ள வார்த்தைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டமன்றத்தால் (எண்ணப்பட்ட குறிப்பாடு பெறுவதற்கு) முழு அழுத்தமும் திருப்தியும் அளிக்கும் திறன் மிக்க பொருளாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும். முடிவாக, நீதிபதிகள் பொருள் விளக்கம் செய்பவர்கள் என்ற நிலையில் எதிர்பார்க்கப்படுகிறார்களேயொழிய அவர்கள் திருத்தம் செய்யக்கூடியவர்களாக செயல்பட முடியாது.

சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே அதைச் செய்யக் கூடியவர்கள்.(அதை சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே செய்பவர்கள்)நீதிபதிகள் திருத்தம் செய்ய முயற்சித்தால் அது சட்டமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது.



## II. செய்சட்டம் திறனுடையதாகவும், நடைமுறைக்கு உகந்ததாகவும் செய்யப்படவேண்டும்:
**[Statute to be made effective and workable]:**

1. பயனற்றதாக அல்லது இல்லா நிலையதாக செய்சட்டத்தை ஆக்கிவிடும் கட்டுமானத்திற்கு நீதிமன்றங்கள் மிகுந்த எதிர்ப்பாக இருக்கிறது. **[UTRES MAGIS VALEAT QUAM PEREAT]** என்ற மூதுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கொள்கையின் மீது செய்சட்டம் அல்லது எந்த வகையமும் திறனுடையதாக செயல்படக் கூடியதாக இருக்கும் வகையில் பற்றீடு கொள்ளப்பட வேண்டும்.

2. ஒவ்வொரு செய்சட்டமும் செயலுக்குகந்ததாக வடிவமைக்கப்பட வேண்டும். மேலும் நீதிமன்றங்கள் அதன் குறிக்கோளைப் பாதுகாக்கும் வண்ணம் பொருள் விளக்கம் செய்ய வேண்டும்.

3. செய்சட்டத்தில் உள்ள வார்த்தைகள் முற்றிலும் பொருளற்றவையாகவும், தெளிவற்ற பொருள் உள்ளதாலும் மட்டுமே அது செல்லாது என அறிவிக்கமுடியாது. மேலும் அதற்கான சரியான பொருளைக் கண்டுபிடிப்பது தேவையுமாகிறது.

4. இரண்டு பொருள் விளக்கங்கள் இருக்கிறது. அதில் குறுகிய ஒன்று இயற்றப்பட்ட சட்டத்தின் நோக்கத்தை பெற தவறுகிறது. அத்தகைய கட்டுமானத்தைத் தவிர்க்க வேண்டும். செயல்திறனுடைய முடிவினைக் கொண்டு வரும் நோக்கத்திற்காக மட்டும் விரிவான கட்டுமானம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். தற்காலத்தில் நோக்கத்துடனான கட்டுமானமே பிரபலமடைந்து வருகிறது.

**கல்குவாரி சங்கத்தார் எதிர் பீகார் அரசு AIR 2000 SC 2870:**
***[The Quarry Owners Association Vs. The State of Bihar, AIR 2000 SC 2870]:***

ஒவ்வொரு வார்த்தையும் பல்வேறு தறுவாயில் உபயோகப்படுத்தப்படும்பொழுது, பல்வேறு பொருளைக் கொடுக்கும்

வகையில் நெகிழ்வுடையதாக உள்ளது. வார்த்தைகள் நிலைத்தன்மை கொண்டதல்ல. அது செயல்திறன் கொண்டவை.

அந்த வகையில் செல்லுபடித்தன்மையைக் காப்பதற்காக அதன் செயல்திறனை நீதிமன்றங்கள் பயன்படுத்த வேண்டும். இந்த செயல்திறனே பல செய்சட்டங்கள் இல்லாநிலையதாக அறிவிக்கப்படுவதிலிருந்து காப்பதாகும்.

## III. செய்சட்டம் முழுமையாகப் படிக்கப்பட வேண்டும்: [Statute must be read as a whole]:

1. செய்சட்டத்திலுள்ள சில வகையத்தின் அர்த்தம் அதன் கருப்பொருளில் முழுவதுமாக பரிந்துரைப்பதன் மூலம் சட்டத்தின் முந்தைய நிலை மற்றும் இதர செய்சட்டங்கள் மூலம் தெளிவாக உறுதிப்படுத்தப்பட முடியும்.

2. ஒரு செய்சட்டத்தை முழுமையாக படிக்கும் பொழுதுதான் சட்டமன்றத்தின் எண்ணத்தைக் புரிந்துகொள்ளமுடியும். இந்த விதியை, ஆரம்ப விதி, கட்டாய விதி, சரிப்படுத்தப்பட்ட விதி என குறிக்கலாம். முறை ஆவணத்தின் எந்த பகுதியிலேனும் துல்லியமின்மை மற்றும் சீரின்மை இருந்தால் மொத்த முறை ஆவணத்தையும் சரிபார்க்க வேண்டும்.

3. சின்கா C.J. யின் கூற்றுப்படி, பற்றீடு கொள்ளப்பட வேண்டிய சட்டக்கூறுகளுக்கு மட்டும் தனது கவனத்தை நெறிப்படுத்தாது மொத்த செய்சட்டத்திற்கும் கவனத்தை செலுத்துவதன் மூலம் நீதிமன்றம் சட்ட மன்றத்தின் எண்ணத்தை உறுதிப்படுத்த முடியும்.

4. சட்டமன்றத்தால் பயன்படுத்தப்பட்ட வார்த்தை தெளிவாக உள்ளது அல்லது தெளிவற்று உள்ளது என்ற முடிவு செய்சட்டத்தை முழுமையாக படிப்பதன் மூலம் மட்டுமே உண்மையாக அறியப்பட முடியும்.



5. செய் சட்டத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் அதன்விரிவான அர்த்தத்தில் பரிசோதிக்க வேண்டியது நீதிபதியின் கடமையாகும். அல்லது ஒரே செய்சட்டத்தின் இதர செயல்படும் வகையங்கள், அதன் முகப்புரை, சட்டத்தின் நடப்பு நிலை, (***Pari Materia***) இதர சட்டங்கள், கேடு அகற்றும் மற்றும் இதர சட்ட முறையான வழி முறைகள் மூலம் பரிசோதிக்க வேண்டும்.

6. செய்சட்டம் முழுமையாகப் படிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை ஒரே பிரிவின் பல்வேறு பகுதிகளுக்கு சமமாக பயன்படுத்தப்படக் கூடியது.

பகுதிகளில் ஒன்று விலக்குவாசகமாக அல்லது வரம்புரையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் பிரிவு ஒட்டுமொத்தமாக பற்றீடு கொள்ளப்பட வேண்டும். அதன் எந்தப் பகுதியையும் விலக்க அனுமதியில்லை. ஒட்டு மொத்த பிரிவும் மொத்தமாகச் சேர்த்து படிக்கப்பட வேண்டும்.

## IV. செய்சட்டத்தின் பொருள் தெளிவாக இருந்தால் அதன் விளைவுகள் எப்படி இருப்பினும் அது அப்படியே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்: [If statute’s meaning is plain, effect must be given (irrespective of consequences)]:

1. ஒரு வார்த்தை சந்தேகமில்லாத ஒரேயொரு பொருளை உணர்த்தும் பட்சத்தில் நீதிமன்றங்கள் அப்பொருளையே செயல்படுத்த வேண்டும், அப்பொருள் நல்லதா, தீயதா எனப் பார்க்க வேண்டியதில்லை.

2. ஒரு மொழி அல்லது வார்த்தை சந்தேகமில்லாது சரியாக ஒரே பொருளைக் கொடுக்கும் பட்சத்தில் பொருள் விளக்கம் தேவைப்படாது.

ஒரு சட்டம், தெளிவான பொருளைக் கொடுக்கும் பட்சத்தில் அது புதுமையான, கடுமையான, ஆச்சரியப்படும் வகையிலான

பொருளாக இருந்தாலும் அச்சட்டத்தை அப்படியே நடைமுறைப்படுத்த வேண்டும்.

## V. தெளிவான அர்த்தக் கொள்கையை மதிப்பிடுதல்: [Apprisal of the principle of plain meaning]:

1. ஒரு கொடுக்கப்பட்ட செய் சட்டத்திற்கு, பொருள் விளக்க விதிகளைச் சரியாகப் பயன்படுத்தும்போது முதலில் அதில் உள்ள வார்த்தை, மொழி சரியாக உள்ளதா அல்லது சந்தேகத்திற்கு இடமளிப்பதாக உள்ளதா என்பதை உறுதிசெய்து கொள்ளவேண்டும்.

2. தெளிவற்றது என்றால் வேறுபட்ட மற்றும் மாறுபட்ட அர்த்தங்களுக்கு நேரடியாக மற்றும் சமமாக இடமளிக்கும் பதம் என்று அர்த்தமாகும்.

   வேறுபட்ட தறுவாய்களில் வேறுபட்ட அர்த்தங்களை அளிக்கக்கூடிய வார்த்தையைக் கொண்டிருக்கிறது என்பதற்காக ஒரு வகையம் தெளிவற்றதாகாது. தெளிவற்ற நிலை ஏதும் இல்லாதிருக்கும் போது இருப்பதாக மேற்கொள்ளக் கூடாது.

3. ஒரு அர்த்தத்திற்கு மட்டும் மொழி நேரடியாக மற்றும் நியாயம் உற்றதாக உள்ளது எனில் கடுமையான அல்லது வசதியற்ற நிலை அல்லது ஆச்சரியமான முடிவுகள் அந்த அர்த்தத்திற்கு செயல்திறன் அளிக்க மறுப்பதற்கு கருதப்படுவதாகாது.

## VI. நல்லொழுக்கம் மற்றும் பொருள் விளக்கம்: [Morality and Interpretation]:

நல்லொழுக்கத்தைப் புரிந்து கொள்ள சட்டம், ஒழுக்க முறைகள் மற்றும் உறுதியான நல்லொழுக்கம் போன்றவைகளைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம்.



ஒழுக்க முறைகள் நல்லவையான விதிகளைக் கொண்டுள்ளது. ஒழுக்க முறைகள் மனிதனின் நடத்தையை பாதிக்கும் கொள்கைகள் மீது கவனம் செலுத்துகிறது. மற்றும் சரி மற்றும் தவறு ஆகியவற்றின் தரநிலையைத் தீர்மானிக்கிறது.

சட்டம் குறைந்தபட்சம் குறைவான ஒழுக்கமுறைகளை கொண்டிருக்கும். ஒழுக்க முறை விதிகள் கடப்பாடுடையது அல்ல.

ஒழுக்க முறைகள் முழுமையான தோற்றங்களுடன் கையாற்றுகிறது. ஆனால் உறுதியான நல்லொழுக்கம் எந்த சமூகத்திலும் மேற்கொள்ளப்பட்டுள்ள உண்மையான ஒழுக்கநெறிகளைக் கொண்டிருக்கிறது. நல்லொழுக்கமானது பொது அபிப்பிராயத்தினை ஒப்பளிப்பு செய்வதன் மூலம் நடைமுறைக்கு கொண்டு வரப்படுகிறது.

உறுதியான நல்லொழுக்கத்தில் உள்ள ஒப்பளிப்புகள் நாட்டின் ஒருங்கிணைக்கப்பட்ட செயல் இயந்திரத்தின் மூலம் செயல்படுத்தப்படுவதில்லை.

ஆனால் பொது அபிப்பிராயத்தின் கட்டாயத்தின் பேரில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. சட்டத்தின் செயல்திறன் மிக்க செயல்பாட்டின் மேல்மட்ட மற்றும் கீழ்மட்ட வரம்புகளை உறுதியான நல்லொழுக்கம் தீர்மானிக்கிறது.

ஒழுக்கமுறைகளை விட அதிகமாக சட்டம் மதத்தை பிரதிபலிக்கிறது. ஏனெனில் ஒழுக்க முரணான செயல்களுக்கான ஒப்பளிப்பு கடவுளின் அதிகாரத்தின் மூலம் தான் நடக்கும் என்பதில் மதத்திற்கு நம்பிக்கை உண்டு.

சட்டங்கள் மனிதனின் வெளிப்படையான நடத்தையைக் கூறுகிறது. அதுவே ஒழுக்கநெறிகள் மனிதனின் உள்நடத்தையை

குறிக்கிறது. நல்லொழுக்கம் சட்டமுறை விதிகளின் முன்னேற்றத்திற்கு உதவுகிறது. ஒழுக்கநெறிகள் சட்டமுறைமையில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப உதவுகிறது.

சிறந்த ஆணையைத் தான் சட்டம், நீதி மற்றும் நல்லொழுக்கம் ஆகியவை கோருகிறது. தகைமை நெறியில்லாத சட்டங்கள் எதிர்க்கப்பட வேண்டும் மற்றும் கீழ்ப்படியப்படக் கூடாது. நல்லொழுக்கங்கள் மற்றும் சட்டம் ஒன்றையொன்று பரிமாற்றவகையில் ஊக்கப்படுத்திக் கொள்கிறது. தனிப்பட்டோ அல்லது பொதுவாகவோ ஒழுக்கநெறிகள் சட்டத்தின் பற்றீடு ஆகும்.

சட்டமுறைமைகள் நடத்தையின் சரியான தரநிலை பற்றி பற்றீடு கொண்டுள்ளது. ஒழுக்க அறிவுத்திறன் இல்லாத மக்களுக்கு சட்டம் தான் ஒரே தரநிலை சட்டம் பொது அபிப்பிராயத்தை ஊக்குவிக்கிறது. மற்றும் மாறாக பொது அபிப்பிராயம் சட்டத்தை ஊக்குவிக்கிறது. சரியாக எண்ணும் மக்களால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய சரியான தர நிலைகளை சட்டம் முன் வைக்க வேண்டும்.

ஒழுக்கநெறிகள் பல நூற்றாண்டுகளாக நமது முன்னோர்களின் நன்னடத்தையின் மூலம் பெறப்பட்டு வருகிறது. இது மதத்தின் நீதிப்பேராணைகளால் தீர்மானிக்கப்படுகிறது. முடிவாக மதம் இல்லாமல் நல்லொழுக்கம் இருக்கப்பட முடியாது. நல்லொழுக்கம் இல்லாமல் சட்டம் இருக்கப்பட முடியாது.

## VII. செய்சட்டம் அல்லது ஒப்பந்தத்தில் பொருள் விளக்க சட்டக்கூறு:

**(INTERPRETATION CLAUSME IN STATUTE OR CONTRACT)**

பொருள் விளக்கக் கூறு என்பது சில வார்த்தைகளின் மீதான பொருள் விளக்கம் பொருள் விளக்கச் சட்டக்கூறில் உள்ளது போல இருக்கும் என்ற விளம்புகை செய்யும் வகையில் ஒரு செய் சட்டம் அல்லது ஒப்பந்தத்தில் நுழைக்கப்பட்ட சட்டக் கூறு ஆகும்.



### பொருள்விளக்கச் சட்டக் கூறின் நோக்கம்: (Purpose of Interpretation Clause)

ஆங்கிலச் சட்டத்தில் ஒப்பந்தங்கள் போன்ற சட்ட ஆவணங்கள் கட்டுமானம் மற்றும் பொருள் விளக்கத்தின் தெரிந்த விதிகளின்படி பொருள் கொள்ளப்படுகிறது/பொருள் விளக்கப்படுகிறது.

கட்டுமானத்தின் தெரிந்த விதிகளை பயன்படுத்துவதற்கு மற்றும் பொருள் மயக்கமான வார்த்தைகளுக்கு பொருள் விளக்கம் தருவதற்கான காரணங்கள் பின்வரும் பொதுக் கொள்கையின் அடிப்படையிலானது. ஒரு ஒப்பந்தத்திற்கான தரப்பினர்கள் ஒப்பந்தம் தொடர்பான ஆவணங்களின் அர்த்தம் மற்றும் சட்டவிளைவை ஒரு உறுதித்தன்மையுடன் இறுதிசெய்ய முடியவேண்டும்.

இந்த வகை பொருள்விளக்கம் ஒரு நீதிமன்றத்தால் எவ்வாறு ஒரு ஒப்பந்தம் பொருள் விளக்கப்படும் என்ற மெய்யுறுதியை கூட்டுகிறது. ஒப்பந்தங்களின் பொருள் விளக்கத்தின் தெரிந்த விதிகளின் செயல்பாட்டின் மூலம் சட்ட விளைவின் உறுதித்தன்மையை இந்த பொருள் விளக்க விதிகள் சாதகப்படுத்துகிறது. அத்தகைய பொருள் விளக்க விதிகள் ஒத்த ஒப்பந்தங்கள் மற்றும் வகையங்களுக்கு ஒவ்வும் வழிமுறையில் பயன்படுத்தக் கூடும்.

இந்த வகையில் எவ்வாறு ஒரு ஒப்பந்தம் பொருள் விளக்கப்படும் என்பது தொடர்பான ஒரே வகை தகராறுகள் எழும்போது இந்த தெரிந்த விதிகள் தகராறு செய்யும் தரப்பினர்களிடையே வழக்காடல் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறை இந்த தெரிந்த விதிகள் குறைக்கிறது.

### பொருள் விளக்க சட்டச் கூறுகளின் சட்டமுறை அர்த்தம் : [LEGAL MENAING OF INTERPRETATION CLAUSES]

வணிக ஒப்பந்தங்களில் தரப்பினர்கள் பொருள் விளக்க சட்டக் கூறுகள் எவ்வாறு பொருள் கொள்ளப்படவேண்டும் அல்லது பொருள் விளக்கப்பட வேண்டும் என்று எண்ணுகின்றனர் என்பதை

வெளிப்படுத்துவதற்கு பொருள் விளக்க சட்டக் கூறுகள் இணைக்கப்படுகிறது. ஒப்பந்தங்களில் உள்ள கூறுகளுக்கு இவை குறிப்பிட்ட அர்த்தத்தை சேர்க்கலாம்.

அவை ஒப்பந்தங்களின் கட்டுமானத்தின் கொள்கைகளின் பயன்பாட்டை நீக்கலாம், மாற்றலாம், சேர்க்கலாம், விளக்கலாம் அல்லது மீண்டும் கூறலாம். ஒப்பந்த—மொன்றிலுள்ள வேறு எந்த சட்டக்கூறுபோல பொருள் விளக்க சட்டக் கூறும் அது ஒப்பந்தத்தில் தோன்றுவதுபோல பொருள் விளக்கப்படவேண்டும்.

**பொதுவான பொருள்விளக்க சட்டக் கூறுகள்:**
**(COMMON INTERPRETATION CLAUSES)**

பொருள் விளக்க சட்டக் கூறுகளில் உள்ள வகையங்கள் பொதுவாக பின்வருவனவற்றை வழங்குகிறது:

1) ஒப்பந்தத்தில் ஒருமையில் தோன்றும் வார்த்தைகள் பன்மையிலும் தோன்றும். ஆகவே ஒரு கப்பல் சரக்குகள் என்ற குறிப்புரை பல கப்பல் சரக்குகள் என்பதையும் சேர்க்கும் என்று ஒப்பந்தம் வெளிப்படையாக தெரிவிக்கிறது.

2) ஒரு இணத்திற்கான குறிப்பீடு அனைத்து இனங்களுக்கும் பொருந்தும். ஆகவே ஒரு ஒப்பந்தத்தில் அவன் என்ற குறிப்பீடு அவள் என்ற குறிப்பீட்டிற்கும் மற்றும் அது என்பதையும் கூட எடுத்துக்கொள்ளப்படும். அது என்பது இயற்கையான நபர் அல்லாத ஒரு சட்டக்கருத்துரு ஆகும்.

3) நபர்கள் என்பதைக் குறிக்கும் வார்த்தைகள் இயற்கையில் நபர்கள் மட்டுமல்லாது (அதாவது மனிதர்கள்) ஒரு நிறுவனம், இணைக்கப்படாத சங்கம் போன்ற சட்ட நபர்களுக்குமான குறிப்பீடுகளையும் கொண்டிருக்கும்.



4) செய்சட்டங்கள் மற்றும் இதர சட்டங்களுக்கான குறிப்பீடுகள் அந்த செய்சட்டங்கள் அல்லது சட்டங்களின் திருத்தங்களை அவ்வப்போது குறிப்பதற்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

5) ஒப்பந்தத்திற்கான ஒரு தரப்பினருக்கான குறிப்பீடு உரிமை மூலம் மற்றும் உரிமை மாற்றத்திற்கான வாரிசுரிமைதாரர்களுக்கும் குறிப்பீடு ஒன்றை உள்ளடக்கும்.

6) உடன் படிக்கையிலுள்ள சட்டக்கூறுகளுக்கான தலைப்புகள் குறிப்பீட்டு சுலபத்தன்மைக்கு மட்டுமே இந்த உடன்படிக்கையின் பொருள்—விளக்கத்தை இது பாதிக்காது.

7) உள்ளடக்கும் என்ற வார்த்தை கட்டுப்பாட்டுடன் பொருள் விளக்கப்படமாட்டாது.

8) உடன்படிக்கையிலுள்ள தலைப்புகள் ஒப்பந்தத்தின் சட்ட விளைவை பொருள் விளக்குவதற்கு பயன்படுத்தப்படக் கூடாது.

9) ஒப்பந்தமொன்றில் பொருள் விளக்க சட்டக்கூறு தேவைப்படுகிறதா அல்லது இல்லையா மற்றும் உடன்படிக்கையை செல்லுறுத்தும் குறிப்பிட்ட வகையங்கள் சேர்க்கப்படவேண்டுமா என்பது உடன்—படிக்கையின் வகை, தன்மை மற்றும் குழப்பத்தன்மையை சார்ந்து சேர்க்கப்படவேண்டும்.

10) பொருள் விளக்க சட்டக்கூறுகள் சில சமயங்களில் வரையறை சட்டக்கூறுகள் அல்லது உடன்படிக்கையின் முடிவில் சேர்க்கப்படுகிறது.

**ஊ. முடிவுரை:**
**[CONCLUSION]:**

ஆக பொருள் விளக்கம் என்பது சட்டசபையின் சரியான எண்ணத்தை அர்த்தத்தை உறுதி செய்யும் ஒரு செயல் முறையாகும்.

அச்செயல் முறையில் சட்டம் முழுமையாகப் படிக்கப்படவேண்டும். அச்சட்டம் திறனுடையதாகவும், நடைமுறைக்கு உகந்ததாகவும் இருக்கும் வண்ணம் பொருள் விளக்கம் செய்யப்படவேண்டும்.

அச்சட்டமொழி சந்தேகமற சரியான பொருளைக் கொடுக்கும்பட்சத்தில், அதன் விளைவுகளைப் பற்றி கவலைப்படாது அப்படியே நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

## முந்தைய பல்கலைக் கழக வினாக்கள்

1. "பொருள் விளக்கம்" – வரையறு. பொருள் விளக்கத்திற்கான விதிகளை விளக்கிக் கூறுக.
2. பொருள் விளக்கம் சம்பந்தமான பல்வேறு விதிகளைக் கூறுக.
3. "செய் சட்டம் முழுமையாகப் படிக்கப்படவேண்டும்" இந்த கொள்கை எந்த அளவிற்கு பொருள் விளக்கத்திற்குப் பயன்படுகிறது– விளக்குக.
4. கீழ்வருவனவற்றிற்கு சுருக்கமாக விடையளி:

   **i.** பொருள் விளக்கம்.

   **ii.** அமைந்த பொருள்.

   **iii.** சட்டமியற்றுபவர்களின் கருத்துக்கள்.

   **iv.** பொருள் விளக்கம் மற்றும் பொருள் கட்டுமானம்.